# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1999/45 - 2016 දෙසැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2016.12.30

1999/45 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கோவை இலக்கம்: GAL/LAN/ACQUIS/A13/20.
காணி அமைச்சின் கோவை இலக்கம்: 4-3/9/2013/WS/688.

ஒரு பொது விடயத்திற்குத் தேவையாக கீழே காட்டப் பட்டுள்ள காணியைப் எடுத்துக்கொள்வதற்கு அரசு எண்ணியுள்ளதனால் 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் படி இத்தால் அறிவித்தல் செய்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

சப்ரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில், கலிகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், பெலிகல் கோரளை கிழக்குப் பிரிவில், பிஸோவல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கே. 3519 ஆம் இலக்க மற்றும் 2016.12.07 ஆந் திகதிய வரைபடத்திற்கேற்ப மொத்த அளவில் 0.0151 ஹெக்டயார் அளவிலான காணித் துண்டுகளின் விபரம்:

**1. துண்டு இலக்கம் 01**
காணியின் பெயர்: பிபிலே கும்புர தற்போது தோட்டம்; உரித்துக் கோருபவர்: ஆர். ஏ. சுமனாவதீ, இலக்கம் 39, பிஸோவல, கலிகமுவ நகரம்; விஸ்தீரணம்: 0.0147 ஹேக்டயார்.

**2. துண்டு இலக்கம் 02**
காணியின் பெயர்: பிபிலே கும்புர தற்போது தோட்டம்; உரித்துக் கோருபவர்: ஆர். ஏ. சுமனாவதீ, இலக்கம் 39, பிஸோவல, கலிகமுவ நகரம்; விஸ்தீரணம்: 0.0004 ஹேக்டயார்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு உரிமை அல்லது வேறு எவையேனும் தொடர்புகள் கொண்ட அனைவரும் தத்தமது அல்லது அவர்களின் ஆவணங்கள் மூலம் அதிகாரமளிக்கப்பட்டவர்கள் அல்லது 2017, சனவரி 25 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்க கலிகமுவ பிரதேச செயலகத்தில் என்னை சந்தித்தல் வேண்டும்.

மேலும் 2017, சனவரி 18 ஆந் திகதிக்கு முன் குறித்த காணி/காணிகள் சம்பந்தமாக அவர்களின் உரித்துக்களின் தன்மைகள், குறித்த காணியைப் பெற்றுக்கொள்வதற்காக நட்டஈடு வேண்டுவதற்கு இருக்கின்ற விடயங்கள் சம்பந்தமான விபரங்களையும், நட்டஈட்டுத்தொகை மற்றும் அத்தொகையினைக் கணக்கிட்டவிதம் போன்ற வற்றினையும் இரண்டு பிரதிகள் கொண்ட பத்திரம் மூலம் எனக்கு அறியத்தருதல் வேண்டும்.

கே. ஜீ. எஸ். நிஷாந்த,
பிரதேச செயலாளர்,
கலிகமுவ.

பிரதேச செயலகம்,
கலிகமுவ,
2017, திசெம்பர் 28.

1 - 426

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*